நாங்களும் படித்தோம். என்றாலும் நம்முடைய தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தலைவருக்கு அத்தகைய சிக்கல் ஏதும் கிடையாது. அப்படிச் சிக்கல் ஏதும் வருமானால் அது பற்றி இந்த அவை ஆராயும்.

(இ) தெலுங்கு கங்கைத் திட்டம் பற்றி ஆந்திர மாநில திட்டக் குழுத் தலைவர் பேசியுள்ளது குறித்து.

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை நகரத்தினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த தெலுங்கு கங்கை திட்டம் சம்பந்தமாக நம்முடைய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருப்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஏற்கெனவே ஒப்பந்தபடியும் 47 கோடி ரூபாய் கொடுத்து அது வட்டி இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு பத்திரிகையிலே ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு திட்டக் குழுத் தலைவர் அவர்கள், ஒரு பொறுப்பான பதவியிலே இருக்கக் கூடியவர்கள், தமிழக அரசு தர வேண்டிய பணத்தை ஒப்பந்தப் படி தராத காரணத்தினாலே கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வராது என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆகையினால் அரசின் சார்பாக இது குறித்து என்ன விளக்கம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து இப்போது என்ன நிலவரம் என்பதைப் புதியதாகப் பொறுப்பேற்றுள்ள எங்களுக்கு முழுமையாக எதுவும் தெரிவதற்கு நியாயம் இல்லை. எனவே நான் தமிழக அரசினுடைய முக்கியமான அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்தவுடன் ஒரு தேதி குறிப்பிட்டு ஆந்திராவிற்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி என்ன நிலவரத்திலே இப்போது தெலுங்கு கங்கைத் திட்டம் இருக்கிறது, எந்தெந்த நிலைகள் நிறைவு செய்யப்பட்டால் உடனடியாகச் சென்னைக்கு தெலுங்குகங்கைத் திட்டத்தினுடைய தண்ணீரைக் கொண்டுவர இயலும் என்பவைகளைப் பற்றியெல்லாம் பேசி முடித்து என்னிடத்திலே விவரம் அளிக்க வேண்டும் என்றும் அந்த விவரங்களின் அடிப்படையில் நான் ஆந்திர முதல்வர் அவர்களைச் சந்தித்து—அதற்கு ஒரு நேரம் குறிக்கப்பட்டு—அவரோடு கலந்து பேசி விரைவில் அந்தத் திட்டத்தை சென்னை மாநகருக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.